அரசாங்க பங்கு மூலதனத்தை தலைக்கு ரூபாய் இரண்டாயிரம் என்று உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா? அதோடு இப்போது பெட்ரோல் விலை கூடிவிட்டதால் அவர்களுக்கு அன்றாடத் தவணை அதிகமாகத் தெரிகிறது. இந்த ஐந்தாண்டுகளுக்குள் முழுத் தவணையையும் கட்டியாக வேண்டும். ஆகவே அதை ஏழு ஆண்டுகளாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த இரண்டு புதிய கோரிக்கைகளையும் பரிசீலிக்கலாம்.

திரு. த. சோணையா : கார் ஓட்டுபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கார் வழங்குவதற்கு நகராட்சிகள், பெரிய கார்ப்பரேஷன்கள், முனிசிபாலிட்டிகள் இவைகளில்தான் வழங்குவதாகத் தெரிய வருகிறது. மேஜர் பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைத்துக் கார் வழங்க அனுமதி கோரினால் அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி பல கோரிக்கைகள் வந்திருக்கிற காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் எல்லா ஊர்களையும், எங்கெங்கு தொடங்க விரும்புகிறார்களோ அவற்றையெல்லாம் இணைக்கலாம் என்ற ஒரு பிரச்சினையும் இருக்கிறது.

Production of Castor oil

* 343 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the places in this State where castor oil is processed on a large scale?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆமணக்கெண்ணெய் சேலம், விருதுநகர், திருப்பத்தூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know the prospect of export market and also whether there are State Farms?

THE HON. THIRU S. MADHAVAN : I have no details.